செ.வெ.எண். 25 நாள்: 13.08.2020

**கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறை சார்பாக நடைபெற்று வரும் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 13.08.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறை சார்பாக ரூ. 3 கோடியே 43 லட்சத்து 49 ஆயிரம் மதிப்பில் நடைபெற்று வரும் சாலை பணிகள், பிரதமமந்திரி வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடு கட்டுமான பணிகள் மற்றும் ஏரி குளம், தூர் வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ. ப. அவர்கள் இன்று ( 13.08.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கும் போது:**

வேப்பனப்பள்ளி ஒன்றியத்தில் ஏரி குளம் தூர் வாரும் பணிகள் மணவாரணப்பள்ளி ஊராட்சி சீரனப்பள்ளி குட்டை, நேரலகிரி ஊராட்சியில் எட்டிப்பட்டி குட்டை, குரியனப்பள்ளி ஊராட்சியில் கல்குட்டை, சித்தகும்மனப்பள்ளி குட்டை, மாரசந்திரம் ஊராட்சி ஊசோஜிராவ் குட்டை, பண்டப்பள்ளி குட்டை, வேப்பனப்பள்ளி ஊராட்சியில் அரியனப்பள்ளி குட்டை, கோடிப்பள்ளி குட்டை, என்னேக்கோல் குட்டை, கரிசல்நத்தம் குட்டை மற்றும் கொல்லப்பள்ளி ஊர் குட்டை என ரூ. 65 லட்சத்து 66 ஆயிரம் மதிப்பில் தூர் வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதேப்போல ஊரக சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாதேப்பள்ளி முதல் எக்குடுதாம்பட்டி சாலை ரூ. 23.17 லட்சம் மதிப்பிலும், நெடுமருதி முதல் பாம்புகாரன் கொட்டாய் வரை ரூ. 43.07 லட்சம் மதிப்பிலும், பெரிய சூலாமலையில் ரூ.33.48 லட்சம் மதிப்பிலும், பெரியகோடிப்பள்ளியில் ரூ. 46.02 லட்சம் மதிப்பிலும், சிகரமாரணப்பள்ளி சாலை ரூ. 49 லட்சம் மதிப்பில் என மொத்தம் ரூ.3 கோடியே 16 லட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஆவல்நத்தம் முதல் காளிங்காவரம் வரை 2 கி.மீ தூரத்திற்கு ரூ. 56 லட்சம் மதிப்பில் புதிய சாலை அமைக்கும் பணிகள் முடிவுற்றது . அதேப்போல வேப்பனப்பள்ளி ஒன்றியத்தில் பாரதபிரதமர் வீடு வழங்கும் திட்டத்தின் கீல் தலா, 1.70 லட்சம் மதிப்பில் 125 வீடுகள் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை விரைவில் முடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். சு.பிரபாகர் இ.ஆ,ப. அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வீரோஜிப்பள்ளி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி வளாகத்தில் மாகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ. 7 .09 லட்சம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள பள்ளி சுற்று சுவர் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் யொட்டி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இவ்வாய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சிவகுமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.முருகன், திரு.முகிலன், ஒன்றிய பொறியாளர்கள் திரு.ஜெகதீஸ்குமார், திரு. முருகேசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், பணி மேற்பார்வையாளர் திரு. நாகராஜ், மாரசந்திரம் ஊராட்சி மன்ற தலைவர் திரு.முருகேசன், ஊராட்சி செயலர் திரு. பாபு ஆகியோர் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள்தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.